‘இரட்டை என்ஜின்’ ஆட்சிகளில் ‘ஒற்றை இலக்க’ பொருளாதார வளர்ச்சி

# ‘ஒற்றை என்ஜின்’ ஆட்சியான ‘திராவிட மாடல்’ ஆட்சியில் ‘இரட்டை இலக்க’ பொருளாதார வளர்ச்சி!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஏப். 30 -

நிதி மேலாண்மையில் ‘இரட்டை என்ஜின்’ ஆட்சிகளில் ஒற்றை இலக்க வளர்ச்சி - ‘ஒற்றை என்ஜின்’ ஆட்சியான ‘திராவிட மாடல்’ ஆட்சியில் இரட்டை இலக்க வளர்ச்சி! வெறும் ஓட்டுக் கண்ணோட்டத்தோடு - குறுகிய நிலையில் பார்க்காமல், நாட்டு வளர்ச்சிக் கண்ணோட்டத்தோடு பார்த்தால், எவரும் வாழ்த்தியே ஆகவேண்டும்! ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கும் முதலமைச்சருக்கும் பாராட்டு கலந்த வாழ்த்துகள் என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டு ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கும் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆளுமைத் திறமைக்கும், சொல்லால், எழுத்தால் அல்ல - செயலால் சாதித்து, வெற்றிக் கொடி நாட்டிடும் ஆட்சி என்பதற்கும் ‘பளிச்’சென்ற எடுத்துக்காட்டுக்கு அதன் பொருளாதாரத் துறை வளர்ச்சி! தமிழ்நாடு அரசின் சென்ற ஆண்டு பெருமிதத்திற்குரிய வளர்ச்சி விகிதம் 10.2% என்பதிலிருந்து 2025-2026 ஆம் நிதியாண்டில், 10.83% வளர்ச்சி விகிதத்தினை எட்டியுள்ளது இனிப்பான செய்தியாகும்! திராவிட மாடலின் வெற்றிக்கு ஒரு கண்கூடான களம் ஆகும்!

நிதி மேலாண்மையில் எப்படி தனித்துவம் பெற்ற ஆட்சியாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது ‘திராவிட மாடல்’ ஆட்சி ஒளிருகிறது என்பதற்கு, திட்டமிட்டு அனைவரையும் உள்ளடக்கிய இந்த வளர்ச்சியே (Inclusive Growth) உகந்ததோர் அளவுகோல் ஆகும்!

இந்தியாவின் தேசிய சராசரி வளர்ச்சி 7.4 சதவிகிதம்தான்! ‘ஒற்றை’ இலக்கத்துக்குள் அடக்கம். ‘இரட்டை என்ஜின் ஆட்சிகளால்தான் சாதனை செய்ய முடியும்’ என்று பிரதமர் மோடி முதல் அவரது ‘சுற்றுக்கிரகங்கள் வரை’ எசப்பாட்டுப் பாடுவது, வழக்கம்.

**‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனை சரித்திரம்!**

அதனைச் செயலில் முறியடித்து, ஒற்றை என்ஜின் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் சாதித்து, இந்திய நாட்டின் இரண்டாவது மாநிலமாக தமிழ்நாடு உயர்ந்துள்ளது என்பது, முதலமைச்சரின் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனைச் சரித்திரம்! அவ்வாட்சியின் ஆட்சிக் கிரீடத்தில் அமைந்துள்ள சிறப்பு ஒளிமுத்து அல்லவா? நிதி மேலாண்மை, ஆளுமையின் ஒரு முக்கிய அம்சம்!

எப்படி இந்த இரட்டை இலக்கச் சாதனையை, ஒற்றை என்ஜின் அரசான ‘திராவிட மாடலால்’ சாதித்துக் காட்ட முடிந்தது என்பதை ஆராய்ந்தால், கல்வி மருத்துவம் போன்ற வாழ்வாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ள துறைகளுக்குச் செய்யப்படும் நிதி ஒதுக்கீடுகளை “செலவினம்” என்று கருதாமல், சமூக வளர்ச்சிக்கான “முதலீடு” என்று கருதிச் செலவிட்டும், சரியாகத் திட்டமிட்டும், பொருளாதார வல்லுநர்களின் வழிகாட்டும் நெறிமுறைகளையும் கலங்கரை விளக்காக்கியும் ஆட்சி நடத்திய 5 ஆண்டு வளர்ச்சியின் வேகமும், வேலை வாய்ப்புக்கான தொழில் முதலீடுகளை ஈர்த்து, தமிழ்நாட்டிற்கு அழைத்துக் கால்கோள் விழா நடத்தி, கடும் முயற்சிகளால் தமிழ்நாட்டின் தொழில் வரைபடம் முற்றாக மாறியுள்ளதன் வெளிச்சமுமே இது!

இதற்கு முன்பு ஆண்ட எடப்பாடியார் ஆட்சியில், இது எத்தனை சதவிகிதம்? வாங்கிய கடன், நிதி மேலாண்மையின் லட்சணம் இவற்றுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது ஒரு புறம். காலியான கஜானாவையும், கடன் உள்ள அரசையும்தானே தந்துவிட்டுப் போனது முந்தைய அ.தி.மு.க. ஆட்சி! அதைவிட முக்கியம் ‘இரட்டை என்ஜின்’ ஆட்சியின் சராசரி 7.4 சதவிகிதம்.

ஒற்றை என்ஜின் - அதுவும் பல நிதி மறுப்புத் தடங்கல்களையெல்லாம் தாண்டித்தான் இந்த இரட்டை இலக்க சாதனை! தெளிந்த பொருளாதார அறிவும், புரிதலும் உள்ள எவரும் இதற்காகத் தமிழ்நாடு ‘திராவிட மாடல்’ ஆட்சியைப் பாராட்டியே தீருவர்.

**தமிழ்நாடு - பெரியார் மண் - திராவிட உணர்வு நிலம்!**

தமிழ்நாடு ஜாதிக் கலவரம், “மதக் கலவரம் இல்லா அமைதிப் பூங்காவாக”த் திகழும் பெரியார் மண் - திராவிட உணர்வு நிலம் என்பது ஒரு முக்கிய அடிப்படைக் காரணமல்லவா?

இந்த ஒப்பற்ற சாதனைக்காக முதலமைச்சரைப் பாராட்ட மனமில்லாதவர்களும்கூட, தமிழ்நாட்டின் வளர்ச்சிக் கண்ணோட்டத்தோடு பார்த்தால், பாராட்டியே தீரவேண்டியவர்கள் ஆவார்கள். எவரும் வாழ்த்தியே ஆகவேண்டும்!

இதனை வெறும் ஓட்டுக் கண்ணோட்டத்தோடு - குறுகிய நிலையில் பார்க்காமல், நாட்டு வளர்ச்சிக் கண்ணோட்டத்தோடு பார்த்தால், வாழ்த்தியே ஆகவேண்டும் எவரும்! முதலமைச்சர் கூறியுள்ளது போல, “எண்ணற்ற சாதனைகளை எண்களாகவும் செய்து காட்டும் எடுத்துக்காட்டு ஆட்சியே ‘திராவிட மாடல்’ ஆட்சி” ஆகும். பாராட்டு கலந்த வாழ்த்துகள்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தஞ்சையில் மக்காச்சோளம் விளைச்சல் அதிகரிப்பு!

தஞ்சாவூர் , ஏப். 30 -

தஞ்சாவூரை அடுத்த திருமலை சமுத்திரம் பகுதியில் மக்காச்சோளம் அறுவடை தீவிரமாக நடைபெற்று வருகிறது. அதனை சாலையில் வைத்து காயவைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். நாளுக்கு நாள் பெருகி வரும் இறைச்சி மற்றும் பால் பொருட்களுக்கான தேவையால் கால்நடை வளர்ப்பை அதிகரித்தாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

கோழிப்பண்ணைகளும் இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியை அதிகரித்து வருகின்றன. இதனால் அடர் தீவனங்களின் தேவை பல மடங்கு அதிகரித்துள்ளது. அடர் தீவன உற்பத்தியில் முக்கிய மூலப்பொருளாக மக்காச்சோளம் உள்ளது.

இதனால் மக்காச்சோள சாகுபடியில் தஞ்சாவூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் அதிகளவில் மேற்கொண்டு வருகின்றனர்.

முக்கியமாக மானாவரி பகுதியில் விவசாயிகள் மக்காச்சோள சாகுபடியை மேற்கொள்கின்றனர். காரணம் குறைந்த தண்ணீர் குறைவான பராமரிப்பு என்ற அளவில் மக்காச்சோள சாகுபடி விவசாயிகள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது. ஒருசில பகுதிகளில் நெல்லுக்கு மாற்றுப் பயிராக மக்காச்சோளம் சாகுபடியும் நடந்து வருகிறது. இதற்காக விற்பனையும் உடனே முடிந்து விடுவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து வருகின்றனர்.

தஞ்சையின் முக்கிய பயிராக நெல் இருந்து வருகிறது. நெல்லுக்கு அடுத்தப்படியாக சோளம், எள், வெற்றிலை, வாழை, கரும்பு, கீரை, பயிர், தேங்காய் உள்ளிட்டவையும் சாகுபடி செய்யப்படுகிறது. நெல்லுக்கு அடுத்ததாக கரும்பு சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டினர்.

தஞ்சை மாவட்டம் திருமலை சமுத்திரம், குருவாடிபட்டி, வல்லம், சாலியமங்கலம், நாஞ்சிக்கோட்டை, சூரியம்பட்டி, மருங்குளம், ஏழுபட்டி, மின்னாத்தூர், குருங்குளம், தங்கப்ப உடையான்பட்டி, தோழகிரிபட்டி, கொத்தம்பட்டி, திருக்கானூர்பட்டி உள்ளிட்ட பல்வேறு மேட்டுப்பகுதி கிராமங்களில் உள்ள விவசாயிகள் மக்காச்சோளத்தை சாகுபடி செய்திருந்தனர்.

இந்தப் பயிருக்கு அதிக அளவில் தண்ணீர் தேவை இல்லாததால் மேற்கண்ட கிராமங்களில் சாகுபடி அதிக அளவு செய்திருந்தனர். சோளம் பயிர் நன்கு வளர்ந்து பூ பூத்து சோளத்தையும் வெளியில் பெரிய அளவில் கொடுத்து இருந்தது. இந்த சோளம் முதிர்வடைந்த பின் தற்போது விவசாயிகள் தொடர்ந்து அறுவடையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மக்காச்சோளம் 4 மாத கால சாகுபடி பயிராகும். தற்போது அறுவடை மேற்கண்ட கிராமங்களில் தீவிரமாக நடந்து வருகிறது.

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மகசூல் குறைவாக உள்ளதாகவும் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் விவசாயிகள் கூறுகின்றன. அறுவடை செய்த இடத்திற்கே வந்து வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். உடனே பணமும் கைக்கு வந்து விடுகிறது என விவசாயிகள் கூறுகின்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் தரப்பில் கூறுகையில்; மக்காச்சோளம் அறுவடை முடிந்து காயவைக்கும் இடத்திலேயே வந்து வியாபாரிகள் கொள்முதல் செய்து விடுகின்றனர். சில சமயம் விலை இல்லாமல் அவ்வப்போது ஏற்ற இறக்கமாக இருக்கும். இருப்பினும் உடனுக்குடன் பணம் கிடைத்து விடுகிறது. இந்த ஆண்டு செலவு போக குறைந்த அளவில் லாபம் கிடைக்கிறது என்று தெரிவித்தனர்.

ஆனால் இந்த முறை நல்ல விலைக்கு மக்காச்சோளம் விற்பனை நடைபெறவில்லை. விதை சோளம் ரூபாய் 550 க்கு வாங்கி தற்போது ஒரு குவின்டால் ரூபாய் 1900க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தமிழக அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் மூலம் நெல் வாங்குவது போல் மக்காச்சோளத்தை யும் வாங்கினால் எங்களுக்கு லாபம் கிடைக்கும். அதற்கு தமிழக அரசு முன்னுரை வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

குஜராத் உள்ளாட்சித் தேர்தலில்

# 730 வேட்பாளர்களை மிரட்டி வாபஸ் பெற வைத்த பா.ஜ.க.!

## தில்லுமுல்லில் வெற்றி பெற்றது பா.ஜ.க. – காங்கிரஸ் குற்றச்சாட்டு!

காந்தி நகர், ஏப். 30 -

குஜராத் மாநிலத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றது. அதிகளவில் யாரும் விறுவிறுப்பு காட்டாத நிலையில், நகர்ப் பகுதிகளில் 50 சதவிகிதத்துக்கும் குறைவான வாக்குகளே பதிவாகின. மாநகராட்சிப் பகுதிகளில் 48 புள்ளி 55 சதவிகிதம், நகராட்சிகளில் 58 புள்ளி12 சதவிகிதம், மாவட்ட பஞ்சாயத்துகளில் 60 புள்ளி 22 சதவிகிதம் வாக்குகளும் பதிவானது. உள்ளாட்சித் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

அதன்படி, ஒன்று, இரண்டு இடங்கள் என்றில்லாமல், பெரும்பாலான இடங்களில் பா.ஜ.க. வெற்றி பெற்றுள்ளது. இந்த தேர்தலுக்கு முன்னதாக, பா.ஜ.க.வினர் போட்டியிடும் 730க்கும் மேற்பட்ட இடங்களில் அவர்களை எதிர்த்து போட்டியிட்டவர்கள் தங்களது வேட்பு மனுக்களை திரும்ப பெற்றனர்.

இதனால், 730 இடங்களில் பா.ஜ.க. வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. தங்கள் கட்சி வேட்பாளர்களை மிரட்டி வேட்பு மனுக்களை பா.ஜ.க.வினர் திரும்ப பெற்று வெற்றி பெற்றதாக காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

# மே தினத்தில் மதுபானம் விற்பனை செய்யத் தடை!

## மாவட்ட ஆட்சியர் உத்தரவு!

சென்னை, ஏப். 30 -

மே தினத்தையொட்டி வரும் 1ம் தேதியன்று, சென்னை மாவட்டத்தில் மதுபானம் விற்பனை செய்யக்கூடாது, மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சென்னை ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்ப தாவது:

மே தினம் வரும் வெள்ளிக் கிழமை (மே 1) கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு சென்னை மாவட்டத்தில் மே தினத்தன்று மதுபானம் விற்பனை செய்யக்கூடாது.

தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை விதிகள் மற்றும் தமிழ்நாடு மதுபான உரிமம் மற்றும் அனுமதி விதிகள் ஆகியவற்றின் கீழ், சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக், மதுபான சில்லறை விற்பனை கடைகள் மற்றும் பார்கள், உரிமம் பெற்ற கிளப் பார்கள், ஹோட்டல் பார்கள், மதுபான விற்பனையகங்கள், மதுபானக் கூடங்கள் அனைத்தும் அன்றைய தினம் இயங்கக்கூடாது. கண்டிப்பாக மூடப்பட்டி ருக்க வேண்டும்.

இந்த உத்தரவை மீறி மது விற்பனையில் ஈடுபட்டால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

# உதகையில் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை அதிகரிப்பு!

## கனரக வாகனங்களுக்கு கட்டுப்பாடுகள்!

ஊட்டி, ஏப். 30 -

உதகை கோடை விழாவை முன்னிட்டு நீலகிரி மாவட்டத்திற்கு செல்ல அம்மாவட்ட காவல்துறை கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. மே 1ஆம் தேதியிலிருந்து பால், பெட்ரோல், சமையல் எரிவாயு கொண்டு செல்லும் கனரக வாகனங்கள் மட்டும் உதகை நகருக்குள் செல்ல அனுமதி அளிக்கப் பட்டு உள்ளது.

இதர கனரக வாகனங்கள் காலை 8 மணி முதல் இரவு 9 மணி வரை நகருக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் மேட்டுப்பாளையத்தில் இருந்து உதகை செல்லும் வாகனங்கள் கேத்தி, லவ்டேல்,மஞ்சனகொரை,பர்ஹின்ஹில் வழியாக உதகை நகருக்குள் செல்ல வேண்டும் என்ற அறிவிக்கப்பட்டுள்ளது.

கூடலூரில் இருந்து செல்லும் இலகுரக வாகனங்கள் தலைகுந்தா மட்டம், புதுமந்து வழி மூலம் ஸ்டீஃபன் சர்ச் வழியாக நகருக்குள் செல்லலாம் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மேட்டுப்பாளையத்தில் இருந்து கூடலூர் செல்லும் அனைத்து சுற்றுலா வாகனங்களும் லவ்டேல் ரயில் நிலையம், மஞ்சனகொரை, காந்தல் முக்கோணம் வழியாக கூடலூருக்கு செல்லலாம் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

அதே நேரம் குன்னூரிலிருந்து உதகை செல்லும் வாகனங்கள் ஆவின் வாகன நிறுத்துமிடத்திலும், கோத்தகிரியில் இருந்து செல்லும் வாகனங்கள் அரசு கலைக்கல்லூரி தற்காலிக வாகன நிறுத்துமிடத்திலும் நிறுத்தப்படும்.

வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் இருந்து தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, தொட்டபேட்டா உள்ளிட்ட சுற்றுலாதலங்களுக்கு அரசு சுற்றுலா பேருந்துகள் மூலம் செல்லலாம் என்றும் நீலகிரி மாவட்ட காவல்துறை தெரிவித்துள்ளது. அதே போல் உதகையில் இருந்து மேட்டுப்பாளையம் செல்லும் அனைத்து சுற்றுலா வாகனங்களும் கோத்தகிரி வழியாக மட்டுமே செல்ல வேண்டும், குன்னூர் பர்லியாறு வழியாக செல்ல அனுமதி கிடையாது.

உதகையில் கோடைசீசன் துவங்கி உள்ள நிலையில் உள்ளூர் மற்றும் சுற்றுலா பயணிகளின் நலன் கருதி போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக நீலகிரி மாவட்ட காவல்துறை தெரிவித்துள்ளது.

மேலும் சுற்றுலா நகரமாக திகழும் உதகையில் அதிக மக்கள் வருகை மற்றும் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்துள்ளனர். தவிர உதகை நகரில் சீரான போக்குவரத்தை உறுதி செய்ய காவல் துறை சிறப்பு ஏற்பாடுகளை செய்துள்ளதாக கூறப்படு கிறது. மேலும் முக்கிய சாலைகளில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள்

# நம் முதல்வரின் சாதனைகளைச் சொல்லும்! மே 4 ல் வெல்வார் - புதிய வரலாறு படைப்பார்!

## நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி.ஓவியம் உறுதி!

சென்னை, ஏப். 30-

தமிழர் நெஞ்சங்களில் தவிர்க்க முடியாத தலைவராகத் திகழும் நம் முதல்வர் அவர்களின் உன்னத உழைப்பினால் தமிழ்நாட்டில் நிறைவேறியுள்ள திட்டங்கள் வரலாறு சொல்லும் மே 4 ல் வென்று காட்டுவார்! உதயசூரியன் உதிக்கும் உதிரிகள் உதிரும் என நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:

உழைப்பால் உயர்வு, பண்பான பேச்சு மக்களோடு மக்களாக திகழ்கிறார் நம் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நம் தளபதி தமிழ்நாட்டு அரசியலில் மட்டும் அல்ல, தேசிய அரசியலிலும் தனக்கென்று ஓர் இடத்தை உறுதி செய்திருக்கிறார். தமிழ் நாட்டின் கல்வி மற்றும் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் அடைந்த நம் மாநிலத்தை மற்ற மாநிலத் தலைவர்கள் அத்திட்டத்தை பின்பற்றி வருகிறார்கள். பெண்கள், முன்னேற்றம் புத்தக வாசிப்பு அதிகரிப்பு, போன்ற பல சிறப்புகளை வியந்து பார்க்கிறார்கள். இந்த தேர்தலில் நம் தளபதி வெற்றி பெறுவதோடு மட்டும் இல்லாமல், தமிழ்நாட்டை பின்னோக்கி கொண்டு செல்லும் தவறுதலான அரசியலை நிராகரிப்போம்.

தமிழ் மக்களின் நெஞ்சங்களில் தவிர்க்க முடியாத தலைவராவார். சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட மண் இது, பெரியார், அண்ணா,தமிழின தலைவர் கலைஞர் பிறந்த மண். திராவிட இயக்கங்கள் கொடுத்த உரிமைகளை தமிழ் நாட்டு மக்கள் மறக்க முடியுமா? சமத்துவம் இருந்திருக்காது, மொழிப்பற்று இருந்திருக்காது, நாம் தமிழ் நாடு என்று அழைக்கும் சொல்லிற்கு சொந்தக்காரர் நம் திராவிட தலைவர்கள்.

இப்போது ஒன்றிய அரசின் அடக்கு முறையை ஒடுக்கி, மதவாத சாயம் இல்லாமல் எந்த சூழ்நிலையிலும் நம் உரிமைகளை காப்போம் என்று நம்பிக்கையை உணர்த்தி மக்களின் காவலனாக,கவசமாக, நான் உங்களுடன் என்றும் மனதில் நிற்பேன் என்று விமர்சன ங்களை அடித்து நொறுக்கினார் நம் தளபதி.

1) டங்ஸ்டன் சுரங்கம் பிரச்சனையில் நான் இருக்கும் வரை இந்த திட்டத்தை வரவிட மாட்டேன் என்று குரல் கொடுத்து சொல்லி வச்சி செய்தார்.

2) திருப்பரங்குன்றம் விவகாரத்தில் நாங்கள் “விளைவுகளை சந்திப் போம்” என்று அரசாங்கத்தின் குரலாக ஒலித்தார்.

3) தொகுதி மறுவறையறை விவகாரத்தில் தளபதி கையாண்ட விதம் சிறப்பானது.

நகலை எரித்து வரலாறு படைத்தார்.

எல்லா மாவட்டத்திலும் டய்டல் பார்க், மற்றும் ஸ்மார்ட் சிட்டி அமைத்தார்.எல்லா நகரங்களிலும் நவீன பேருந்து நிலையம் அமைத்து மக்கள் மனதில் பாராட்டு பெற்றார்.

மதுரையில் கலைஞர் நூலகம் பல் நோக்கு மருத்துவமனை, ஜல்லிக்கட்டு மைதானம் என்று அரசியல் நோக்கத்திற்காக போட்ட திட்டம் இல்லை. வாக்கிற்காகவும் இல்லை மக்களுக்காவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிதிட்டமாக மட்டுமே. நம் தமிழ் மண்ணுக்கு நம் சமூகத்திற்கு தரமான தலைமுறைகள் தேவை.

மனித நேயமிக்க நம் தளபதி வெல்வார். இத்தலைவனை நம் தமிழ்நாடு பெற்ற வரம். வெற்றி முழங்க சூரியன் உதிக்கும் உதிரிகள் உதிரட்டும்

வாழ்க திராவிடம். வாழ்க தளபதி.

இவ்வாறு திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# மகாராஷ்டிராவில் சுட்டெரிக்கும் கோடை வெயில்!

## வெப்பத் தாக்கத்தினால் 109 பேர் பலி!

மும்பை, ஏப். 30 -

மகாராஷ்டிர மாநிலத்தில் தற்போது கோடை வெயிலின் தாக்கம் முன்னெப்போதும் இல்லாத வகையில் மிகத் தீவிரமாக உள்ளது. மாநில சுகாதாரத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, கடந்த மார்ச் 1, 2026 முதல் ஏப்ரல் 20 வரையிலான இடைப்பட்ட காலத்தில் மட்டும் வெப்பத்தாக்கத்தினால் மொத்தம் 39 பாதிப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. இதில் மிகவும் கவலையளிக்கும் விதமாக, மாநிலம் முழுவதும் இது வரை 109 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

குறிப்பாக அக்கோலா, நந்துர்பார் மற்றும் ரத்னகிரி ஆகிய மாவட்டங்களில் அதிகப்படியான பாதிப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. மும்பை மாநகராட்சி பகுதியில் நேரடி வெப்பத்தாக்க பாதிப்புகள் ஏதும் புதிதாக இல்லை என்றாலும், வெப்பம் சார்ந்த இதர உடல்நலக் குறைபாடுகளால் 108 மரணங்கள் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் சுமார் 3.34 லட்சத்திற்கும் அதிகமானோர் வெப்பம் தொடர்பான உபாதைகளுக்காக சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்த அபாயகரமான சூழ்நிலையை கருத்தில் கொண்டு, மகாராஷ்டிர சுகாதாரத் துறை அனைத்து மாவட்ட மருத்துவமனைகளையும் தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தியுள்ளது. வெப்பத்தாக்க நோயாளிகளுக்கென தனி படுக்கைகள், போதுமான அளவு ORS பாக்கெட்டுகள் மற்றும் குளிர்ந்த குடிநீர் வசதிகளை உறுதி செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்கள் மதியம் 12 மணி முதல் மாலை 4 மணி வரை வெளியில் செல்வதைத் தவிர்க்குமாறும், தளர்வான பருத்தி ஆடைகளை அணிந்து போதுமான அளவு தண்ணீர் குடித்து உடலை நீரேற்றத்துடன் வைத்திருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஏதேனும் உடல்நலப் பாதிப்புகள் ஏற்பட்டால் காலம் தாழ்த்தாமல் உடனடியாக மருத்துவ உதவியை நாடுவது அவசியம் என்றும் சுகாதாரத் துறை எச்சரித்துள்ளது.

# காஸ் சிலிண்டர் விநியோக காத்திருப்பு காலம் குறைப்பு!

## எண்ணெய் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் தகவல்!

சென்னை, ஏப். 30 -

பெரும்பாலான பகுதிகளில் காஸ் சிலிண்டர் விநியோகத்துக்கான காத்திருப்புக் காலம் 5 நாட்களுக்கும் குறைவாக மாற்றப்பட்டுள்ளது.

விநியோக கால அளவை மேலும் குறைக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக தமிழகம் மற்றும் புதுச்சேரி எண்ணெய் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் வி.சி.அசோகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழகம் மற்றும் புதுச்சேரி முழுவதும் எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்களான ஐ.ஓ.சி., பி.பி.சி., எச்.பி.சி. பெட்ரோல் பங்குகளில் பெட்ரோல் மற்றும் டீசல் போதுமான அளவில் கிடைக்கின்றன.

எந்தவித பதற்றமும் தேவையில்லை. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் முதல் முனையங்கள், கிடங்குகள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் வரை முழு விநியோகச் சங்கிலியும் தடையின்றிச் செயல்படுகிறது.

மாநிலம் முழுவதும் பெட்ரோல் மற்றும் டீசல் இருப்பு நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, தடையின்றி விநியோகம் உறுதி செய்யப்படுகிறது.

எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் (ஐ.ஓ.சி., பி.பி.சி., எச்.பி.சி.) தமிழகம் முழுவதும் உள்நாட்டு எல்.பி.ஜி. விநியோகத்தையும் தடையின்றி மேற்கொண்டு வருகின்றன.

எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்களின் தொடர் முயற்சி, தமிழக அரசின் தீவிரக் கண்காணிப்பு ஆகியவற்றால், பெரும்பாலான பகுதிகளில் எல்.பி.ஜி. சிலிண்டர் விநியோகத்துக்கான காத்திருப்புக் காலம் 5 நாட்களுக்கும் குறைவாக மாற்றப்பட்டுள்ளது.

விநியோகத்துக்கான கால அளவை மேலும் குறைப்பதற்கான அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எண்ணெய் விற்பனை நிறுவனங்களின் பங்குகளில் ஆட்டோ எல்.பி.ஜி. போதுமான இருப்பு உள்ளது.

ஆட்டோ எல்பிஜி தடையின்றி கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது. இதற்காக கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது.

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.